பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
25 10 2025 SATURDAY 7.15 PM
ஆகாஷவாணி

## தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்கிபாத் நிகழ்ச்சி அகில இந்திய வானொலியில் நாளை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.
2. பண்டிகை காலத்தின்போது ஒன்றரை கோடிக்கும் மேற்பட்டோர் ரயில்களில் பயணம் மேற்கொண்டதாக ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.
3. பிரதமரின் தானிய உற்பத்தி வேளாண் மேம்பாட்டு திட்டத்தின்கீழ், தமிழகத்தில் வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர், திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.
4. நாட்டின் சுகாதாரத்துறையை உலகத்தரத்திற்கு உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.
5. இந்தோனேஷியா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Devika Sihag இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்கிபாத் நிகழ்ச்சி அகில இந்திய வானொலியில் நாளை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

பிரதமர் உரை முடிந்தவுடன் அதன் தமிழாக்கத்தை சென்னை அகில இந்திய வானொலி ஒலிபரப்புகிறது.

இது இரவு 8 மணிக்கு மறுஒலிபரப்பு செய்யப்படும்.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள வானொலி நிலைங்கள் இதனை அஞ்சல் செய்யும்.

<<<<<<>>>>>

பண்டிகை காலத்தின்போது ஒன்றரை கோடிக்கும் மேற்பட்டோர் ரயில்களில் பயணம் மேற்கொண்டதாக ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த பண்டிகை காலத்தின் இறுதிக்குள் இரண்டரை கோடி பேர் ரயில் பயணம் மேற்கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதாக கூறினார்.

ரயில் நிலையங்களில் பயணிகளின் கூட்ட நெரிசலை தவிர்க்க, ரயில்வே பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

திரு லாலு பிரசாத் ரயில்வே அமைச்சராக இருந்தகாலத்தில், தீபாவளி, Chaath பண்டிகைக்காக 178 சிறப்பு ரயில்கள் மட்டும் இயக்கப்பட்டதை சுட்டிக்காட்டிய அவர், தற்போது 13 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறப்பு ரயில்கள் இயக்கப்படுவதாக கூறினார்.

நாட்டில் ஒவ்வொரு ஆண்டும் நான்காயிரம் கிலோமீட்டருக்கு புதிய ரயில் பாதைகள் அமைக்கப்பட்டு வருவதாகவும் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

விவசாயத்தில் பின்தங்கிய மாவட்டங்களில் வேளாண் உற்பத்தியை அதிகரிக்க, பிரதமரின் தானிய உற்பத்தி வேளாண் மேம்பாட்டு திட்டத்தின்கீழ், தமிழகத்தில் வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர், திருவண்ணாமலை ஆகிய நான்கு மாவட்டங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்தார்.

வேலூர் மாவட்டம் விரிஞ்சிபுரத்தில் நடைபெற்ற விவசாயிகள் கலந்துரையாடல் நிகழ்ச்சியில் பங்கேற்று பேசிய அமைச்சர், தென்னையில் பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்துவதற்காக தமிழகத்திற்கு வேளாண் விஞ்ஞானிகள் கொண்ட ஆய்வுக்குழு அனுப்பிவைக்கப்படும் என்று தெரிவித்தார்.

தமிழகத்தில் மாம்பழத்திற்கு உரிய விலை கிடைக்க மாநில அரசுடன் இணைந்து புதிய திட்டத்தை மத்திய அரசு விரைந்து கொண்டுவரும் என்றும் அவர் கூறினார்.

பருப்பு வகைகள் உற்பத்தியை மேம்படுத்துவதற்கான மத்திய அரசின் புதிய திட்டத்தை செயல்படுத்துவதற்கு மாநில அரசு ஒத்துழைக்க வேண்டும் என்றும் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கூறினார்.

<<<<<<>>>>>>

பீகாரில் இரண்டு கட்டங்களாக நடைபெறவுள்ள சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

பிஜேபி மூத்த தலைவரும், உள்துறை அமைச்சருமான திரு அமித் ஷா மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு பேசினார்.

பீகார் மாநிலத்தின் வளர்ச்சிக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருவதாக அவர் கூறினார்.

பீகார் முதலமைச்சராக திரு நிதிஷ்குமார் பதவியேற்றபின் அம்மாநிலத்தில் குற்றங்களின் எண்ணிக்கை வெகுவாக குறைந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

பீகாரிலிருந்து நக்சல் தீவிரவாதத்தை முழுமையாக அகற்ற தேசிய ஜனநாயக கூட்டணி அரசு தொடர்ந்து செயல்பட்டு வருவதாக அவர் கூறினார்.

பட்னாவில் செய்தியாளர்களிடம் பேசிய ராஷ்ட்ரிய ஜனதாதள தலைவர் திரு தேஜஸ்வி பிரசாத், தேசிய ஜனநாயக கூட்டணி அரசு வேலைவாய்ப்பு, தொழில்வளர்ச்சி உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வுகாண தவறிவிட்டதாக தெரிவித்தார்.

Motihari-யில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரத்தில் கலந்துகொண்டு பேசிய மக்கள் சுதந்திர கட்சித் தலைவர் திரு பிரசாந்த் கிஷோர், தேசிய ஜனநாயக கூட்டணியும், எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணியும் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யவில்லை என்று கூறினார்.

*பீகாரில் அடுத்த மாதம் 6 மற்றும் 11ஆம் தேதிகளில் இரண்டு கட்டங்களாக சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ளது.*

<<<<<<>>>>>

*பிரதமரின் பள்ளிகள் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுவதன் மூலம், கேரளாவில் அனைத்து மாணவர்களும் பயன்பெறுவார்கள் என்று மத்திய இணையமைச்சர் திரு சுரேஷ் கோபி தெரிவித்துள்ளார்.*

*திருவனந்தபுரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கேரள அரசு இத்திட்டத்தை செயல்படுத்த தீர்மானித்துள்ளது வரவேற்கத்தக்கது என்று தெரிவித்தார்.*

*அரசின் நலத்திட்டங்களை செயல்படுத்துவதை அரசியலாக்கக் கூடாது என்று கூறிய திரு சுரேஷ்கோபி, பிரதமரின் பள்ளிகள் மேம்பாட்டுத் திட்டத்தின்மூலம், பள்ளிகள் சீரமைக்கப்படும் என்று கூறினார்.*

<<<<<<>>>>>

*நாட்டின் சுகாதாரத்துறையை தனியார் பங்களிப்புடன் உலகத்தரத்திற்கு உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.*

*தில்லி பல்கலைக்கழக மருத்துவ கல்லூரி பட்டமளிப்பு விழாவில் இன்று உரையாற்றிய அவர், ஆராய்ச்சியாளர்களும், விஞ்ஞானிகளும், தொழில் நிறுவனங்களும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்தார்.*

*பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசின் திட்டங்கள் மூலம், விண்வெளி, அணு ஆராய்ச்சி, உயிரி தொழில்நுட்பம்*

*உள்ளிட்ட துறைகளில் தனியார் நிறுவனங்களுக்கு வாய்ப்புகள் அதிகரித்துள்ளதாக டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.*

*<<<<<<>>>>>>*

*தமிழகத்தில், செறிவூட்டப்பட்ட அரிசி விநியோகத்திற்கு மாநில அரசுக்கு அனுமதி அளிப்பது தொடர்பாக, மத்தியக்குழுவினர் இன்று நாமக்கல் மாவட்டத்தில் உள்ள அரிசி ஆலைகளில் ஆய்வு மேற்கொண்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*(Voice Byte – கண்ணன் 30 Sec.)*

*<<<<<<>>>>>>*

*பழம்பெரும் இந்தி திரைப்பட நடிகர் Satish Shah இன்று மும்பையில் காலமானார். அவருக்கு வயது 74.*

*Jaane Bhi Do Yaaro, Main Hoon Na உள்ளிட்ட பல்வேறு திரைப்படங்களில் அவர் நடித்துள்ளார்.*

*<<<<<<>>>>>>*

*தென்கிழக்கு வங்கக்கடலில் நிலைகொண்டுள்ள காற்றழுத்த தாழ்வு மண்டலம் சென்னைக்கு கிழக்கு-தென்கிழக்கே தொள்ளாயிரத்து 50 கிலோமீட்டர் தொலைவிலும், விசாகப்பட்டினத்திற்கு தென்கிழக்கே தொள்ளாயிரத்து 60 கிலோமீட்டர் தொலைவிலும், காக்கிநாடாவிற்கு தென்கிழக்கே தொள்ளாயிரத்து 70 கிலோமீட்டர் தொலைவிலும் மையம் கொண்டுள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*

இது மேற்கு வடமேற்கு திசையில் நகர்ந்து, நாளை ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறி, வரும் திங்கட்கிழமையன்று புயலாக வலுப்பெறும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

ஆந்திரப்பிரதேசத்தின் மச்சிலிப்பட்டினம், கலிங்கப்பட்டினம் இடையே வரும் செவ்வாய்க்கிழமையன்று இந்த புயல் கரையை கடக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப்பொழுது சூறாவளி காற்று 100 முதல் 110 கிலோமீட்டர் வேகத்தில் வீசக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, கிழக்கு மத்திய அரபிக்கடல் பகுதியில் மையம் கொண்டுள்ள காற்றழுத்த தாழ்வு மண்டலம், மங்களூருக்கு வடகிழக்கே 680 கிலோமீட்டர் தொலைவிலும், மும்பைக்கு தென்கிழக்கே 430 கிலோமீட்டர் தொலைவிலும் மையம் கொண்டுள்ளது.

இது வரும் 24 மணிநேரத்தில் வடமேற்கு திசையில் கிழக்கு மத்திய அரபிக்கடல் பகுதிக்கு செல்லும் என்றும் இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>

தெற்கு சூடானில் ஏற்பட்டுள்ள மழை வெள்ளத்தால் ஒன்பது லட்சத்திற்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளதாக ஐ நா தெரிவித்துள்ளது.

இந்த வெள்ளப்பெருக்கு காரணமாக 140 சுகாதார மையங்கள் சேதமடைந்துள்ளதாகவும், இதனால், தொற்று நோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் உலக சுகாதார அமைப்பு கூறியுள்ளது.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

இந்தோனேஷியா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் Devika Sihag இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், 21-9, 19-21, 21-12 என்ற செட் கணக்கில், இந்தோனேஷியாவின் Mutiara Ayu Puspitasari -ஐ வென்றார்.

------------

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான மூன்றாவது மற்றும் இறுதி ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 9 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

சிட்னியில் நடைபெற்ற இப்போட்டியில், முதலில் பேட் செய்த ஆஸ்திரேலியா 46 புள்ளி நான்கு ஓவரில் 236 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

237 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய இந்தியா 38 புள்ளி மூன்று ஓவரில் ஒரு விக்கெட் இழப்பிற்கு வெற்றி இலக்கை எட்டியது.

ரோஹித் சர்மா அபாரமாக ஆடி சதம் அடித்தார்.

----------------

புரோ கபடி லீக் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் ஹரியானா – ஜெய்பூர் அணியையும், மும்பை – பாட்னா அணியையும் எதிர்கொள்கின்றன.

--------------

லண்டனில் நடைபெற்றுவரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் மணிக்கா பத்ரா காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

*<<<<<<END>>>>>>*